***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.199/2022 – P.W. 5 (LW5)***

| | |
|---|---|
| *Name* | ஜெயபாஸ்கர் கோட்டக கலால் அலுவலர், மன்னார்குடி. |
| *Father/Husband's Name* | ஏகன் |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *50* |

**எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 12.02.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் கோட்ட கலால் அலுவலராக மன்னார்குடியில் பணிபுரிந்து வருகிறேன்

கடந்த 26.06.2019 ம் தேதியன்று இரவு 11.00 மணிக்கு முக்குளம் சாத்தனூர் ஏரியாவில் மணல் அள்ளுவதாக தகவல் கிடைக்கப்பெற்று சம்பவ இடத்திற்கு மகாதேவபட்டினம் கிராம உதவியாளர் சேவல்கொடியோன், செந்தில்குமார் கிராம உதவியாளர் முக்குளம் சாத்தனூர், நான் மற்றும் துணை வட்டாட்சியர் செந்தில் ஆகியோர்கள் சென்றோம். செந்திலை நாங்கள் முன்னால் செல்லுமாறு நாங்கள் பின்னால் வருவதாக கூறி அனுப்பினோம். கொஞ்ச நேரத்தில் செந்தில் சத்தம் போட்டார். நாங்கள் உடனடியாக செந்தில் சத்தம் போட்ட இடத்திற்கு சென்றோம். அப்போது செந்தில் என்னை 3 நபர்கள் அசிங்கமாக திட்டி, அடித்து போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். செந்தில் தலையில் இருந்து முதுகுதண்டு வரை வலிப்பதாக கூறியதால் நான் அவரை அழைத்து சென்று மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். நான் எதிரிகளை பார்க்கவில்லை. எதிரிகள் மூவரும் தாக்கியதாக செந்தில் கூறினார். பின்னர் நாங்கள் வடுவூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்த அன்றே வடுவூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். புகாரை யார் எழுதி கொடுத்தது என்றால் நாங்கள் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டார்கள். செந்தில் தனியாக ஒரு புகார் கொடுத்தார். மறுபடியும் போலீசார் விசாரித்து எந்த வாக்குமூலமும் வாங்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் சென்ற ஊர் தளிக்கோட்டை பஞ்சாயத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான்.

சம்பவ இடத்தில் ஆறு, வாய்கால், ஏரி எதாவது உள்ளதா என்றால் இல்லை. வயல் மாறி இருந்த இடத்தில் தோண்டி மண்ணை எடுத்தார்கள். வயல்மாறி இருந்த இடத்தில் தோண்டு மண் எடுத்த விபரத்தை போலீசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி வயல் யாருடைய இடம் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அந்த இடத்தின் சர்வே எண் யாருக்கு பாத்தியப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. அசா.1 செந்தில் சொல்லி தான் எதிரிகள் மூன்று பெயரையும் தெரியும் என்றால் சரிதான். அசா.1 செந்திலும், ஆஜர் எதிரிகளும் ஒரே ஊரைச்சேர்ந்தவர் என்றால் சரிதான்

சம்பவ இடத்திற்கு செல்லவேண்டும் என்று தனிப்பட்ட உத்தரவு எதுவும் மேல் இடத்தில் (தாசில்தார், கலெக்டர்) இருந்து வந்ததா என்றால் இல்லை. தகவலின் பேரில் சென்றோம். நாங்கள் அன்றையதினம் காரை எடுத்துக்கொண்டு செல்லவில்லை என்றாலும், அன்றையதினம் இதுபோன்ற சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. பின்னிட்டு அசா.1 செந்தில் கிராம உதவியாளர் சொன்னதின் அடிப்படையில் எதிரிகளை தொடர்புபடுத்தி பொய் புகார் அளித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi